**மதுரமுரளி** Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| | |
|---|---|
| Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319/03-05 |

| | | |
|---|---|---|
| வேணு : 10 | மார்ச் – 2005 | கானம் : 8 |




மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் ப்ரதிஷ்டா தினத்தன்று, பாகவதபவனத்திலிருந்து கோயிலுக்குச் செல்லும்பொழுது, பக்தர்களுடன் "ஹரே ராம...." நாமகீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி

இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் தேதி : 13.02.2005


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;



e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org


ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள்


| | | |
|---|---|---|
| வேணு : 10 | மார்ச் – 2005 | கானம் : 8 |


www.madhuramurali.org





ஏகாதஸீ தினத்தன்று
மாதுரீஸகீ ஸமேத
ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு
திருமஞ்சனம், ஆராதனம்
இடம் : பாகவதபவனம், மதுரபுரி

ஸ்ரீ ஸ்வாமிஜி, குத்துவிளக்கேற்றி
ராதா கல்யாண மஹோத்ஸவத்தை
துவக்கிவைக்கிறார்கள்
இடம் : ஸ்ரீ ராம் மந்திரம்,
மல்லேஸ்வரம், பெங்களூர்.
தேதி : 22.01.2005






ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீ: ஸ்ரீமத் வரவரமுநயே நம:



வந்துனதடியேன் மனம் புகுந்தாய்
புகுந்ததற்பின் வணங்கும்
என் சிந்தனைக்கினியாய்!
திருவே! என்னாருயிரே
அந்தளிரணியார்
அசோகினிளந்தளிர்கள்
கலந்து அவையெங்கும்
செந்தழல் புரையும்
திருவாலியம்மானே

– திருமங்கையாழ்வார்
– பெரியதிருமொழி



# ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹஸ்வாமி பெருமாள் திருக்கோயில்

**திருவாலி – ஸ்ரீ வைஷ்ணவ திவ்யதேசம் – சீர்காழி வட்டம் – நாகை மாவட்டம்**

## அஷ்டபந்தன மஹாஸம்ப்ரோக்ஷணப் பத்திரிகை

நாள்: 16.03.2005 நேரம்: காலை 10.00 - 11.00

ஸ்ரிய: பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், நித்யகல்யாணகுணாத்மனாய், ஸ்ரீ வைகுண்டநிகேதனனாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான், ஸம்ஸாரி சேதனர்கள் உஜ்ஜீவிக்க, பின்னானார் வணங்கும் ஜோதியாய், எம்முமவர்க்கு இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிது என்றபடி, அர்ச்சாவதாரமாகி பலபதிகளில் எழுந்தருளி நித்யவாஸம் செய்து அனைவரையும் வாழ்வித்தருளுகிறான். அப்பதிகளில், 108 திவ்யதேசங்களில் முக்கியமானதும், பஞ்சநரஸிம்ஹ க்ஷேத்திரங்களில் லக்ஷ்மீநரஸிம்ஹஸ்வாமியாக சேவை சாதித்தருளும் ஏற்றம் பெற்றதும், பில்வாரண்ய ஸ்தலமானதும், திருவாலி – திருநகரி என்ற இவ்விரு க்ஷேத்திரங்களும் ஒரே திவ்யதேசமாக கொண்டாடப்படும் வைபவம் கொண்டதும், திருமங்கையாழ்வாராலும், குலசேகர ஆழ்வாராலும் மங்களாசாஸனம் செய்யப்பட்ட ஏற்றம் உடையது திருவாலி க்ஷேத்திரமாகும். திருவாலியில் உள்ள அம்ருத புஷ்கரணியில்தான் ஸ்ரீரங்கநாச்சியார், அம்ருதவல்லியாக அவதரித்து, பூர்ண மகரிஷியால் வளர்க்கப்பட்டு, ஸ்ரீரங்கநாதனை (வயலாலி மணவாளன்) திருக்கல்யாணம் செய்து, திருமங்கையாழ்வாரை அநுக்ரஹித்து, அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசிக்க ஏற்பட்ட விசேஷமான ஸ்தலமாகும்.

இவ்வாறு ஏற்றம் வாய்ந்த இந்த திவ்யதேசம், **"ஸ்ரீ முரளிதர ஸ்வாமிஜி"** அவர்களால் ஏகதேசமாக திருப்பணி கைங்கர்யம் பூர்த்தி செய்யப்பட்டு (நூதன பரகாலன் பைந்தமிழ் மண்டபம் உள்பட), நாளது தாரண வருடம், பங்குனி மாதம் 3-ம் தேதி (16-03-2005), புதன் கிழமை, சஷ்டி திதியும், ரோகிணி நக்ஷத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில், காலை 10.00 மணிக்குமேல் 11.00 மணிக்குள், ரிஷப லக்னத்தில் **"பாஹுர் மஹாத்மா" ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**, முன்னிலையில் மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற இருப்பதால் ஆஸ்தீக மஹாஜனங்கள் அனைவரும் அன்வயித்து மஹாஸம்ப்ரோக்ஷணத்தில் கலந்துகொண்டு பகவானின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்/கேட்டுக் கொள்கிறோம்.

மங்களாநிபவந்து

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 10 மார்ச் 2005 கானம் : 8

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 111 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 4 |
| 4. | வேத கதைகள் - 92 | 5 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 83 | 8 |
| 6. | தடுமாற்றம் | 11 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 86 | 13 |
| 8. | சில நினைவுகள் | 16 |
| 9. | மாலே மணிவண்ணா - 30 | 20 |
| 10. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 30 | 22 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 111 | 27 |

न सन्तोषो भूमिपस्य गृहे दीनस्य भोजनात् ।
भवेद्दीनस्य सन्तोषो भोजनाद्राजमन्दिरे ॥

ஒருவன், ராஜாவின் வீட்டில் சாப்பிட்டுப் போனாலும் சாப்பிடாமல் போனாலும், ராஜாவிற்கு லக்ஷியமில்லை. ஆனால், ராஜா வீட்டில் சாப்பிட்டேன் என்ற பெருமை ஏழைக்கு உண்டு. அதுபோல், பக்திக்கு ஞானத்தின் உதவி வேண்டும் என்ற லக்ஷியமில்லை. ஆனால், ஞானத்திற்குப் பக்தியுடன் கூடினால்தான் பெருமை.

— **ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: ஜயந்தஸ்ரீ தாளம்: ஆதி

*பல்லவி*

*நீ போய் அழைத்து வாராய் – கண்ணனை*
*ஸ்ரீ வைனதேயனே வேத ஸ்வரூபனே (நீ போய்)*

*அனுபல்லவி*

*கண்ணன் கண்ணன் என்று அலற்றும் என் நிலை கண்டு*
*இரக்கமுற்றிலையோ இப்பொழுதே விரைந்து (நீ போய்)*

*சரணம்*

*உனை விட்டால் எனக்கோர் கதியுமில்லை*
*என் நிலை இனி சொல்வதற்கில்லை*
*வினதாவின் மைந்தனே மந்திரமயனே*
*முரளீதரனுடன் சடுதியில் வருவாய் (நீ போய்)*

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhuramurali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamiji's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas and more.

கும்பகோணம் செல்லும்பொழுதெல்லாம் ஸ்ரீ ஸ்வாமிஜி, ஸ்ரீமதி அம்மாளுஅம்மாள் அவர்கள் வீட்டிற்கு முடிந்தவரை விஜயம் செய்வார்கள். அவர்கள் வீட்டில் அம்மாளுஅம்மாள் அவர்களால் பூஜை செய்யப்பட்டுவரும் பாண்டுரங்கன் மிகவும் அழகானவன். நம் ஸ்வாமிஜி அவர்களுக்கு, அந்த ஸ்ரீ மூர்த்தியை தரிசனம் செய்வது என்பது மிகவும் பிடித்தமான விஷயங்களுள் ஒன்று. சமீபத்தில், ஸ்ரீமதி அம்மாளுஅம்மாள் அவர்கள், சென்னைக்கு விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு அது தெரிந்தும், வயதான காலத்தில் அவர்களை ஸத்ஸங்கத்திற்கு அழைத்து சிரமப் படுத்த வேண்டாமே என்று மௌனமாக இருந்துவிட்டார்கள்.

ஆனால், ஒரு நாள் இரவு, ஸ்ரீ ஸ்வாமிஜியின் கனவில் பாண்டுரங்கன் பிரத்யக்ஷமாகி, ஸ்ரீமதி அம்மாளுஅம்மாளை ஸத்ஸங்கத்திற்கு அழைக்கும்படி நியமனம் செய்தான். அதன்படி ஸ்ரீ ஸ்வாமிஜியும் சென்று அம்மாளுஅம்மாளை அழைக்க, அவர்களும் பிரேமிகபவனம் வந்து ஸத்ஸங்கம் நடத்தினார்கள். அன்று, திருப்பதி வெங்கட்ரமணஸ்வாமி மீது புதிய பாடல் ஒன்று ஸ்ரீமதி அம்மாளுஅம்மாள் அவர்களுக்கு உதயமாகியது. அதில், திருப்பதியில் ஸ்வாமி சாற்றிக்கொண்டிருக்கும் சாளக்கிரம மாலையில் உள்ள சாளக்கிரமம் ஒவ்வொன்றும் லக்ஷ்மியின் அம்சம் என்று விசேஷமாக அர்த்தமாகியது. அன்றைய சத்ஸங்கத்தில் பலர் கலந்துகொண்டு பகவானின் கிருபைக்குப் பாத்திரமானார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

## அறிவிப்பு

சென்ற மாத மதுரமுரளி இதழில் பக்கம் 2–ல் வெளிவந்த ஸ்ரீமதி அம்மாளுஅம்மாள் அவர்களின் கீர்த்தனத்தின்
ராகம்: யமுனாகல்யாணி தாளம்: ஆதி

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : நான் தியானம் செய்யும்பொழுது மனதை எவ்வளவு அடக்க முயன்றும் அடக்க இயலவில்லை. பலவிதமான எண்ணங்கள் வந்துகொண்டிருக்கின்றன. என்ன செய்யலாம்?*

பதில் : அப்படி, பலவிதமான எண்ணங்கள் எழும்பொழுது, ''அந்த எண்ணங்களும் என்னைத் தவிர வேறு எதுவும் இல்லை'' என்று **பா**வனை செய்து வர, சிறிது காலத்தில் மனது வசப்படும்.

*கேள்வி: உயர்ந்த பக்தி நிலையில், பகவான் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் மேனிசிலிர்ப்பு, கண்களில் நீர், உடல்நடுக்கம் போன்றவை எல்லாம் ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றதே! எப்பொழுதுமே இப்படி இருக்குமா? அல்லது, எப்பொழுதாவது இப்படி ஏற்படுமா?*

பதில் : மனது சுத்த சாத்வீகத் தன்மையை அடையும்பொழுது இப்படி எல்லாம் ஏற்படும். நம்மாழ்வார், மீரா, ஆண்டாள் போன்ற எண்ணற்ற அடியார்கள் இந்த நிலையில் எப்பொழுதும் இருந்தார்கள்.

*கேள்வி : துறவிகள், மூங்கிலால் ஆன தண்டம் வைத்திருப்பது எதற்காக?*

பதில் : அவர்கள் தவத்திற்கு எந்தத் தடங்கலும் வராமல் பாதுகாப்பதற்காக தண்டம் வைத்துள்ளார்கள். அதில், ஸர்வ தேவதைகளும் வாசம் செய்வதாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு இருக்கின்றது.

---

**ஸ்ரீ ஹரி:**

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில், மஹாரண்யம்**

பக்தர்களின் தரிசனத்திற்காக கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரை
மாலை 3.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை

# வேத கதைகள்- 91

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## விராட் உபாஸனம்
### (முதல் பாகம்)

ஒரு சமயம், ப்ராசீனசாலர் – ஸத்யயக்ஞர் – இந்த்ரத்யும்னர் – ஜனர் – குடிலர் – என்ற ஐந்து முனிவர்கள் வேதங்களை நன்று கற்று, அடிக்கடி பெரிய யாகசாலைகள் அமைத்து, யாகங்கள் செய்து வந்தனர். நன்கு யாகங்களைச் செய்ததால் அவர்கள் மனதில் நல்ல தெளிவு ஏற்பட்டு, தத்துவவிசாரங்கள் செய்தனர்.

ஒரு சமயம் இந்த ஐவரும் ஒன்று சேர்ந்து, 'ஆத்துமா என்றால் என்ன? பிரஹ்மம் என்றால் என்ன?' என்று விசாரம் செய்தனர். அவர்கள், நன்கு விசாரம் செய்தும் அவர்களிடையே ஒருவிதமான தீர்மானமும் ஏற்படவில்லை. அதனால், தகுந்த குருவை அடைந்து அவரிடமிருந்து தத்துவங்களை அறிந்துகொள்ளலாம் என்று தீர்மானித்து உத்தாலகர் ஆச்ரமத்தை அணுகினர்.

இந்த உத்தாலகரைப் பற்றி ஒரு கதை பாரதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவர் பெயர் ஆருணி. உத்தாலகர் என்ற பெயர் பின்புதான் ஏற்பட்டது. அதன் வரலாறு: இந்த ஆருணியானவர், ஒரு குருவிடம் சிறு வயதில் கல்வி கற்றார். அந்தக் குருவிற்கு வயல்கள் இருந்தன. அதனால், விவசாயம் செய்து வந்தார். ஒரு சமயம் மழைக்காலத்தில் அவர் வயலில் மடை உடைத்துக் கொண்டது. அப்பொழுது, ''மடையை அடைத்து வா'' என்று ஆருணிக்குக் குருவானவர் உத்தரவிட்டார்.

ஆருணியும் மடையை அடைக்க எவ்வளவோ முயற்சி செய்தும், அவரால் மடையை அடைக்க முடியவில்லை. இவர் பெருத்த உடல் உள்ளவர். அதனால், மடை அடைவதற்காக மடைவாயிலில் தானே குறுக்காகப் படுத்துக்கொண்டார். மடையும் அடைந்தது. உணவு, உறக்கம் இவற்றைத் தவிர்த்து வெயில், மழை

இவற்றைப் பொருட்படுத்தாமல் நாட்கணக்கில் படுத்துக்கிடந்தார். குருவும் சீடரைக் காணாமல் வருந்தி வயலுக்கு வந்து பார்த்தார். மடை அடைப்பதற்காக ஆருணி படுத்திருப்பது தெரிந்தது. அதனால், மிகவும் வருந்தியவராக, தனக்காகத் துன்பப்படும் சீடரைப் பார்த்து, ''ஓ சீடனே! வெளியே வா'' என்று அழைத்தார். அது முதற்கொண்டு அவருக்கு 'உத்தாலகர்' என்ற பெயர் ஏற்பட்டது. 'உத்தாலகர்' என்றால் மடையைப் பிளந்தவர் என்று பொருள். இத்தகைய பெருமை வாய்ந்த உத்தாலகரை முற்கூறிய ஐவரும் குருவாகத் தேர்ந்தெடுத்தனர்.

அந்த உத்தாலகர் விராட் என்ற ப்ரஹ்மத்தை வழிபடுபவர். தன்னிடம் சீடர்களாக வந்த இவர்கள், தன்னால் வழிபட்டுவரும் விராட் என்ற பரம்பொருளைத் தெரிந்து கொள்வதற்காகத் தன்னிடம் வந்திருக்கிறார்கள் என்று அறிந்துகொண்டார். ஏதோ ஒரு காரணத்தால் அவர்களுக்கு உபதேசம் செய்ய அவருக்கு இஷ்டமில்லை. ஆதலால், வேறு ஒருவரை இவர்களுக்குக் குருவாகக் காட்டிவிடலாம் என்று எண்ணினார். ''ஓ முனிவர்களே! கேகேய தேசத்து அரசன் அச்வபதி என்பவர் விராட் என்ற பரம்பொருளை என்னைக் காட்டிலும் நன்கு அறிந்தவர். அவரிடம் செல்லுங்கள்'' என்று கூறினார்.

அவர்களும் கேகேய தேசம் சென்று அச்வபதியைக் கண்டனர். அச்வபதி என்ற அரசனும் அவர்களுக்குத் தன் புரோகிதர், வேலைக்காரர்களைக்கொண்டு மரியாதை செய்தான். அந்த ஐவரும் ஓர் இரவு அங்கேயே தங்கி, மறுநாள் காலையில் அரசனைக் கண்டனர். அரசனும், அவர்கள் தன்னிடம் பண உதவி பெறுவதற்காக வந்திருக்கிறார்கள் என்று எண்ணி அவர்களுக்குப் பொருளை அளித்தான். அவர்கள், அதைப் பெற்றுக் கொள்ளவில்லை. பண்டைய காலங்களில், முன்னோர்கள், வாழ்க்கை நடத்துவதற்காகப் பணம் பெறுவது வழக்கம். அதை தர்மசூத்ரங்களில், ''யோக க்ஷேமார்த்தம் ஈச்வரன் அதிகச்சேத்'' என்று கூறப்பட்டிருக்கிறது.

ஈச்வரன் என்றால் அரசன் என்பது பொருள். அரசன் அளித்த பொருளை இவர்கள் பெற்றுக்கொள்ளாததால் அரசனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. நான் சுத்தனாக இல்லை. ஆதலால், என் பொருளை இவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்று எண்ணினான்.

சாஸ்திரகளிலும், ''விசுத்தாச்ச ப்ரதிக்ரஹ:'' தூயவனிடமிருந்துதான் பணம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறது. அதைப் பின்பற்றி அந்த ஐவரிடம், தான் தூயவன், நீதியுடன் ராஜ்ய பரிபாலனம் செய்கிறேன் என்பதைப் பின்வருமாறு உணர்த்தினான். ''என் ராஜ்யத்தில் திருடர்களே கிடையாது. நல்ல செல்வமிருந்து கொடுக்காதவன் இல்லை. ப்ராஹ்மணனாக இருந்து மத்ய பானம் செய்வது அறவே இல்லை. பிறர் மனைவியை விரும்புபவன் இல்லை. இதனாலேயே விபசாரப் பெண்களே கிடையாது. ஆதலால், என் பொருளை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம்'' என்று வேண்டினான். அப்போதும் அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது அரசன் தான் கொடுத்ததை அவர்கள் போதுமானது என்று எண்ணவில்லை என்று எண்ணி அவர்களைப் பார்த்துக் கூறினான்.

''சமீபத்தில் நான் ஒரு யாகம் செய்யப்போகிறேன். அதில், யாகத்தை நடத்தித் தருபவர்களுக்கு எவ்வளவு தக்ஷிணை அளிக்கிறேனோ, அவ்வளவு தக்ஷிணையை உங்கள் ஒவ்வொரு வருக்கும் தனித்தனியாக அளிக்கிறேன். தாங்கள் இருந்து யாகத்தைக் காணுங்கள்'' என்று வேண்டினான். அப்பொழுது ''நாங்கள் பணத்திற்காக வரவில்லை. விராட்புருஷனை வழிபடும் முறையை உன்னிடமிருந்து நாங்கள் அறிவதற்காக (உபதேசம் பெறுவதற்காக) வந்திருக்கிறோம். எங்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும்'' என்று வேண்டினர். அரசனும், ''நாளை காலை வாருங்கள்'' என்று கூறினார். இவர்களும் மறுநாள் காலையில் அரசனுக்குக் காணிக்கையாக சமித்துக்கள் எடுத்துக்கொண்டு வந்தனர்.

இந்தக் கதையினால், குருவினிடம் செல்லும்போது வெறுங் கையுடன் செல்லக்கூடாது என்று தர்மம் வெளிப்படுகிறது. தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தைவிட்டு, இவர்கள் அரசனை அணுகியதால், உயர்ந்த கல்வியை, யாவரிடமிருந்தும் பெறலாம் என்றும், கல்வி கற்கும் விஷயத்தில் 'தான் உயர்ந்தவன்' என்ற அஹங்காரம் கூடாது என்ற பல தர்மங்கள் நமக்குப் புலனாகின்றன.

# எந்தரோ மஹானுபாவுலு - 83

சன்யாஸம் பெற்றுக்கொண்டதற்குப் பிறகு, மஹாப்ரபு, ஆசார்யர் சந்திரசேகரரை நவத்வீபத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளை இட்டார் அல்லவா? அவரிடம் இருந்து பிரியாவிடை பெற்று, நவத்வீபத்தை நோக்கித் திரும்பிய சந்திரசேகரஆசார்யருக்கு பிரிவுத் துயர் தாளவில்லை. திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே எங்காவது ப்ரபு தன் பின்னால் கருணை மேலிட்டு வந்து விடுகிறாரோ என்று நோக்கிக்கொண்டே நவத்வீபத்தை நோக்கி நடந்தார்.

''நீங்கள் இல்லாமல் நான் எங்ஙனம் நவத்வீபம் செல்வேன்? சசீமாதாவை எப்படி எதிர்கொள்வேன்? எல்லோரும் என்னைச் சூழ்ந்துகொண்டு ப்ரபு எங்கே? எப்பொழுது வருவார்? என்று கேள்விமேல் கேள்வி கேட்டுத் துளைப்பார்களே! ''ப்ரபு வரமாட்டார். ப்ருந்தாவனத்திற்கு யாத்திரையாகக் கிளம்பிவிட்டார்'' என்று, நான் எப்படிச் சொல்வேன்? பதிவ்ரதையான விஷ்ணுப்ரியாவிற்கு என்ன சொல்லி நான் ஆறுதல் தருவேன்? உங்கள் சன்யாஸத்துக்கான கிரியைகளை நானே செய்தேன் என்று தெரிந்தால் என்னை அனைவரும் நிந்திக்க மாட்டார்களா? இதைவிட நான் கங்கையில் குதித்து உயிரை விடுவதே மேல்'' என நினைத்து, கங்கையில் குதிக்கத் தயாரானார்.

அப்போது அவருக்கு அன்னையிடம் கூறுமாறு ப்ரபு சொல்லி அனுப்பிய விஷயங்கள் நினைவுக்கு வந்தன. ''இதை அன்னையிடம் கூறாமல் நான் உயிரை மாய்த்துக்கொள்வது தவறான செயல் அல்லவா? மேலும், என் வலது கண் துடிக்கிறது. இது ஏதோ நல்ல சகுனம். ப்ரபு, ஒருவேளை நவத்வீபத்துக்கு வருவார் என்று தோன்றுகிறது'' என நினைத்து இரவுவரை கங்கைக் கரையில் மணலில் அமர்ந்துவிட்டு இரவு வெகுநேரமானதும் ஒளிந்து ஒளிந்து நவத்வீபத்தை அடைந்தார்.

அவர் வீட்டை அடைந்ததுமே மின்னல்போல் நகரம் முழுவதும் அவர் வந்துள்ள செய்தி பரவிவிட்டது. செய்தி கேட்டதும் மக்கள் அவர் வீட்டை நோக்கி ஓடிவந்து அவரிடம் ப்ரபு விஷயமாகக் கேள்விகள் கேட்டனர். இதற்குள், சசீமாதாவும் தன் மருமகள்

விஷ்ணுப்ரியாவுடன் ஆசார்யர் வீடு நோக்கி வந்தாள். நிமாயி வீட்டைவிட்டுச் சென்றதிலிருந்து அவள் ஒரு பருக்கை உணவுகூட உண்ணவில்லை. இரு கண்களிலிருந்தும் கண்ணீர் நிரந்தரமாகப் பெருகிய வண்ணமிருந்தது. அன்னையைக் கண்டதும் ஆசார்யர் எழுந்து நின்றுகொண்டார். சோகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அன்னை, ''ஹா நிமாயி!'' என்று கதறியவண்ணம் பூமியில் விழ, ஆசார்யர் அவரைக் கீழே விழாமல் தாங்கிப்பிடித்துக்கொண்டார்.

சந்திரசேகரஆசார்யர் வீடு அழுகைக்குரலால் நிரம்பியது. ''ஆசார்யரே! என் நிமாயியை எங்கு விட்டு வந்தீர்கள்? உண்மையாகவே அவன் சன்யாஸியாகிவிட்டானா? தயவுசெய்து உண்மையைச் சொல்லுங்கள். கழுத்துவரை புரளும் நிமாயியின் சுருள் சுருளான கேசங்கள் மழிக்கப்பட்டனவா? பிச்சை எடுத்து அவன் உண்கிறானா? இந்த துக்கித்த அன்னையைக் காண அவன் வருவானா? என் கையால் அவனுக்கு உணவு பரிமாறவே முடியாதா? ஆசார்யரே ஏன் பேசாமல் நிற்கிறீர்கள்? பதில் கூறுங்கள்'' என அழுதாள்.

ஆசார்யர், அன்னையின் கேள்விக்கணைகளைக் கேட்டு மௌனமாக இருந்தார். கண்ணீர் மட்டும் பெருக்கிக்கொண்டிருந்தார். இதைக் கண்டு அன்னை, நிமாயிக்கு சன்யாஸம் கொடுத்தாகி விட்டது எனப் புரிந்துகொண்டுவிட்டாள். உடனே, ''ஆசார்யரே! எனக்கு நிமாயி இருக்கும் இடத்தை மட்டும் சொல்லுங்கள். அவன் இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது. நான் உடனே அங்குச் செல்லவேண்டும். அவன் எங்கு, எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறானோ? தெரியவில்லையே! கடவுளே! உனக்குத்தான் என்ன கடினமான உள்ளம்! இப்படி அழகிய ரூபம், லாவண்யம், சௌந்தர்யம், பாண்டித்யம் எல்லாம் கொடுத்தும் நிமாயியை வீடு வீடாகச் சென்று பிச்சை எடுக்க வைத்துவிட்டாயே!'' என விதவிதமாகப் புலம்பினாள்.

பிறகு ஆசார்யர் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ப்ரபுவின் சன்யாஸ சம்பந்தமான எல்லா விஷயங்களையும் மெதுவாகச் சொன்னார். இப்படியே இரவு கழிந்தது. சசீமாதாவும், விஷ்ணுப்ரியாவும் என்ன முயன்றும் உணவு உண்ணவே இல்லை. காலையில் அவர்களை ஆசார்யர் வீட்டில் கொண்டுவிட்டு வந்தார். இதே போன்று ஸ்ரீவாஸ், வாஸுதேவ், கங்காதாஸ், போன்ற பக்தர்களும்

உண்ணாமல் உறங்காமல் ப்ரபுவை நினைத்து உருகி அழுதுகொண்டு இருந்தனர்.

மூன்றாவதுநாள் நித்யானந்தர் நவத்வீபத்துக்கு வந்தார். அவர் வந்ததும் ஜனங்கள் அவரை மொய்த்துக்கொண்டு, ''ப்ரபு எங்கே? எப்போது வருவார்?'' எனக் கேட்டனர். ப்ரபுவிடம் விரோதம் பாராட்டியவர்கள்கூட நித்யானந்தரிடம், ''ஸ்ரீபாத்! துஷ்டர்களான நாங்கள்தான் ப்ரபுவை சன்யாஸம் ஏற்கும் அளவிற்கு வைராக்யத்தை வரவழைக்கக் காரணமானோம். எங்களால்தான் அவர் சன்யாஸம் ஏற்றிருக்கிறார்! அவர் மன்னிக்காவிட்டாலும் நாங்கள் எங்கள் பாபத்தின் பலனை அனுபவிக்கத் தயாராக உள்ளோம். ஒரு முறை அவர் இங்கு வந்து எங்களைக் கருணையுடன் நோக்கமாட்டாரா?'' என்று கூறினர்.

உடனே நித்யானந்தர், ''மஹாப்ரபு மிகவும் தயாளு. அவருக்கு மித்ரனோ சத்ருவோ கிடையாது. தனக்குத் தீங்கு இழைத்தவர்களையும் ப்ரேமையால் மூழ்கடிப்பார். உங்கள் ப்ரேமைக்கு வசப்பட்டு அவர் ப்ருந்தாவன யாத்திரை செல்லாமல் புலியா க்ராமம் வழியாக சாந்திபுர் செல்ல இருக்கிறார். அங்கு அத்வைதாசார்யர் வீட்டில் தங்கி இருப்பார். அங்குச் சென்றீர்களானால் அவரை தரிசிக்கலாம்'' என்று கூறினார்.

இதைக் கேட்டதுமே ஜனங்கள் புலியா கிராமத்தை நோக்கி ஓடலானார்கள். கங்கையைக் கடக்கச் சிலர் ஓடம் மூலமாக ப்ரயாணமானார்கள். சிலர் குடத்தைப் பிடித்துக்கொண்டு சென்றனர். சிலர் அப்படியே குதித்து நீந்தலானார்கள். 'ஹரிபோல்', 'ஹரிபோல்' என்று இரைந்துகொண்டே ஆயிரக்கணக்கான மக்கள் புலியா க்ராமத்தை அடைந்தனர். இந்த ஆரவாரத்தைக் கேட்டு, ப்ரபு, ஹரிதாஸின் ஆச்ரமத்தை விட்டு வெளியே வந்தார். அனைவரது கண்களிலிருந்தும் நீர் ஆறாகப் பெருகியது. ப்ரபுவின் கேசமில்லாத தலையையும், சன்யாஸ வஸ்திரத்தையும் பார்த்து, ''ஹா ப்ரபு! ஹா ஹரி!'' என்று கதறினர். ப்ரபு அனைவரையும் குளிரக் குளிரக் கடாக்ஷித்து, வீடு திரும்புமாறு ஆக்ஞையிட்டார். பிறகு அவர் சாந்திபுரை நோக்கி நடந்தார். சிலர் அவருடன் ப்ரயாணமானார்கள். சிலர் நவத்வீபத்துக்குத் திரும்பினர். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# தடுமாற்றம்

அத்வைத சித்தாந்தம், உலகத்தையே பொய் என்கின்றது. கனவில், நாம் பலவிதமான காட்சிகளைக் காண்கிறோம். கனவு கலைந்தவுடன் அவையெல்லாம் மனதினுடைய கற்பனை என்று புரிந்துகொண்டுவிடுகின்றோம். அதுபோல், ஞானிக்கு ஆத்ம தர்சனம் ஆனவுடன் இந்த உலகம் பொய், அதாவது மனதுடைய கற்பனை என்று அனுபவத்தில் தெரிந்துவிடுகின்றது.

அவனும் தன்னுடைய அனுபவத்தை எடுத்துரைக்கின்றான். உபநிஷத், கீதை, ப்ரஹ்மசூத்ரத்துடன் தன்னுடைய அனுபவம் ஒத்து இருப்பதை எடுத்துக் கூறிப் பறை சாற்றுகின்றான். வேதாந்த நூல்களைப் படிப்பதாலும், வேதாந்தத்தைக் கேட்பதாலும் உலகம் பொய் என்பதை அறிவு பூர்வமாக ஒருவனால் உணர்ந்து கொண்டுவிட முடியும். ஆனால், பல பிறவிகளாகவும் இந்தப் பிறவியில் பிறந்தது முதலும் உலக வாசனைகளை நோக்கி ஓடிய மனதை ஒரு கணத்தில் ஆன்மசாதனையில் திருப்பிவிட்டுவிட முடியும் என்று ஒருவன் தவறான கணக்குப் போடுகின்றான். மனிதர்களில், சிலர் உயரமாக இருக்கின்றனர். சிலர் குள்ளமாக இருக்கின்றனர். சிலர் கருமையான நிறம் உடையவர்களாகவும், சிலர் சிவந்த நிறமுடையவர்களாகவும் இருக்கின்றனர். ஒருவனுடைய உருவம்போல் மற்றொருவருடைய உருவம் இருப்பதில்லை.

அளவிடமுடியாத மஹிமை உடையவனாக இறைவனிருப்பதால், ஒருவரைப்போன்று மற்றொருவரைப் படைக்கவேண்டிய அவசியம் இறைவனுக்கு இல்லை. உருவத்தால், நிறத்தால், குணத்தால், அறிவாற்றலால் மனிதர்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுகின்றனர். அதுபோல், மனதை அடக்கி ஆள்வதிலும் ஒருவர்போல் மற்றொருவர் இருப்பதில்லை. மேலும், மனதை அடக்கி ஆள்வதென்பது அவ்வளவு சுலபமான காரியமுமல்ல.

பெரும்பாலான மனிதர்களுக்கு இப்படி ஒரு எண்ணமுண்டு. அதாவது, ஏதாவது சாதித்தால் பெரியதாக சாதிக்க வேண்டும். இல்லையென்றால் ஒன்றும் செய்யக்கூடாது என்ற எண்ணம்தான்

அது. தன்னால் முடிந்தவரை ஏதாவது சாதிப்போமே! என்று யாரும் நினைப்பதில்லை. பொதுவாக, எல்லோருக்கும் உள்ள எண்ணம் இது.

வேதாந்தத்தின்படி உலகம் பொய் என்பதை அறிவுபூர்வமாக உணர்ந்தவன், தனக்கு அது அனுபவத்தில் வந்துவிட்டதுபோல் செயல்பட ஆரம்பிக்கும்போது அவனிடத்திலே ஒரு முரண்பாடு தோன்றுகிறது. முரண்பாட்டிற்கான காரணம், அறிவுபூர்வமாக உலகம் பொய் என்று அறிந்த அவன், அனுபவபூர்வமாக அதை உணராதபொழுது அவனுடைய செயல்பாட்டிலே ஒரு தடுமாற்றம் ஏற்படுகின்றது. உண்மைக்கும், பொய்க்கும் அல்லது அனுபவத்திற்கும் அறிவிற்கும் இடையே ஏற்படும் முரண்பாடுதான் அது. அதனால், மனதளவிலே அவன் பாதிக்கப்படுகின்றான்.

அதனால்தான், இறை வாழ்க்கையில் செல்கின்றவர்களுக்கு நடுவிலே ஒரு மனோரீதியான பாதிப்பு ஏற்படுகின்றது. மனதை அடக்குவதற்காக இவர்கள் பல திட்டங்கள் போட்டும் அதை நடைமுறைப்படுத்த முடியாதபொழுது ஒரு சுயபச்சாதாபம் (self pity), தாழ்வு மனப்பான்மை (Inferiority complex), கோபம் (Anger), மனஇறுக்கம் (depression) எல்லாம் ஏற்படுகின்றன.

ஆகவே, ஆன்மீகப் பாதையில் செல்பவர்கள், இது மிகவும் கடுமையான வழி என்பதை மனதில் நன்றாக வாங்கிக்கொண்டு, பொறுமையாகவும், தியாக புத்தியுடனும், யதார்த்தமாகவும் சாதனை செய்வார்களேயானால் சிறிது சிறிதாக ஆன்மீக வாழ்க்கையில் நிச்சயம் முன்னேறலாம்.

– ராஜமன்னார்குடி **S. விஷ்ணுராத பாகவதர்**
**– வேதாந்த சிரோண்மணி**

---

**நமது மிஷனிற்கு கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

"Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji**"
Guruji Sri Muralidhara Swamigal Mission,
Premika Bhavanam, New No. 2, (Old No. 24), Netaji Nagar,
Jafferkhanpet, Chennai - 600 083.
e-mail : contact@madhuramurali.org

# பாலகர்களுக்கு ஒரு கதை – 86

வெகுகாலத்திற்குமுன் ஒரு முகலாய மன்னர், டில்லியில் ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். அந்தக் காலத்தில், டில்லி, இப்பொழுது போல் இல்லாமல் ஒரு சிறிய நகரமாகச் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டு இருந்தது. மக்கள், டில்லியை 'பஸ்தி' என்று அழைப்பார்கள். 'பஸ்தி' என்றால், மக்கள் கூட்டம்கூட்டமாகக் குடியிருக்கும் இடம் என்று பொருள்.

ஒரு நாள் இரவு, மன்னர், அரண்மனையில் தம்முடைய அறையில் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது, அந்த அறையின் மேற்கூரையில் யாரோ ஒருவர் நடக்கும் சப்தம் கேட்டது. மன்னர் விழித்தெழுந்து, 'யாரங்கே?' என்று அதட்டிக் கேட்டார். அப்பொழுது ஓர் இனிமையான குரல், ''நான் தொலைந்துபோன என்னுடைய ஒட்டகத்தைத் தேடுகின்றேன்'' என்று பதிலுரைத்தது. மன்னர் அந்தக் குரலைக் கேட்டு, ''கூரைமீது ஒட்டகத்தைத் தேடுபவன் ஒன்று பைத்தியக்காரனாக இருக்கவேண்டும் அல்லது ஒரு திருடனாக இருக்கவேண்டும்'' என்று யோசித்தான். கையைத்தட்டி, தன் காவலர் களைக் கூப்பிட்டு, அரண்மனை வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்த வனைக் கண்டுபிடித்து, தன் முன் நிறுத்தும்படி ஆணையிட்டார். காவலாளிகள் எவ்வளவு தேடியும் அந்த மனிதர் கிடைக்கவில்லை. அவர் மாயமாக மறைந்துவிட்டார். அரசனுக்கு இது ஓர் ஆச்சரியமாக இருந்தது.

அடுத்தநாள், மன்னர் தன்னுடைய அரண்மனையில் சபா மண்டபத்தில் அழகிய அரியாசனத்தில் அமர்ந்து இருந்தான். மன்னர் அப்பொழுது, கடவுளைத் தரிசிக்கும் வழிமுறைகளை பல தெய்வீக ஆசார்யர்களுடனும், கற்றறிந்த பல வித்வான்களுடனும் விவாதித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது, அந்த அரசவை வாசலில் ஒரு முற்றும் துறந்த சாது ஒருவர் வந்து, ''இந்தச் சத்திரத்தில் (தர்மசாலை) சில நாட்கள் தங்கிச் செல்ல என்னை அனுமதிக்க வேண்டும்'' என்று அதிகார தோரணையில் கேட்டார். வாயிற் காவலாளி, உள்ளே நுழையும் அவரைத் தடுத்து நிறுத்தி, 'இது அரசவை. இங்கு மன்னர்

தன்னுடைய சபையைக் கூட்டுவது வழக்கம். இது ஒன்றும் நீங்கள் நினைப்பதுபோல் வழிப்போக்கர்கள் தங்கிச் செல்லும் சத்திரம் இல்லை'' என்று விளக்கம் அளித்தான். ஆனால், அந்த சாதுவோ, விடாப்பிடியாக அந்தக் காவலாளியைப் பார்த்து, ''அப்பா! நான் சொல்வதை நன்றாகக் கவனி! நான் இந்த இடத்திற்கு 50 வருடங் களுக்கு முன்பு வந்திருந்தேன். அப்பொழுது, ஒரு வயதானவர் இந்த அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி இப்போது இருப்பவர்கள் இல்லாமல் வேறு சிலர் இருந்தனர். பிறகு, இதே இடத்திற்கு நான் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு வந்தேன். அப்பொழுது, நடுத்தர வயது உள்ள ஒருவர் இந்த அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். நான் இப்பொழுது வந்து பார்க்கும்பொழுது ஓர் இளம் வயதுள்ளவர் அமர்ந்திருக்கின்றார்.

ஓர் இடத்தில், காலப்போக்கில், தங்கிக்கொண்டு இருப்பவர்கள் எல்லோரும் மாறிக்கொண்டிருந்தால் அந்த இடத்திற்குச் சத்திரம் என்றுதானே பெயர்? பிறகு வேறு என்ன பெயர் அதற்கு?'' என்று வினவினார். இந்த உரையாடல்களை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மன்னர், இந்த சாதுவின் குரல் முந்தைய இரவு தன் அறையின் மீது நடந்தவர் குரல்போல் அல்லவா உள்ளது என்று கண்டுகொண்டு, உடனே அவரை உள்ளே வரவழைத்து, ''தாங்கள் மிகவும் சாதுர்யமாக, புத்திக்கூர்மையுடன் அழகாகக் கூறினீர்கள். ஆனால், தாங்கள் நேற்று இரவு ஒட்டகத்தை என் அரண்மனைக் கூரையில் தேடியது முட்டாள் தனம் இல்லையா?'' என்று கேலியாகக் கேட்டார். வந்த சாதுவோ, மன்னவரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து, வெறித்த பார்வையுடன், ''அரியணை மீது நீ சுகமாக அமர்ந்து கடவுளைக் காண நினைப்பது முட்டாள்தனம் இல்லை! நான் அரண்மனைக்கூரை மீது ஒட்டகத்தைத் தேடியது மட்டும் முட்டாள்தனம் அல்லவா?'' என்று வினவினார்.

இந்த எதிர்பாராத பதிலைக் கேட்ட மன்னர், ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்தவர் ஆதலால், உடனே அவருக்கு வைராக்யம் ஏற்பட்டு, நடந்த நாடகத்தைப் புரிந்துகொண்டு, தன்னுடைய அரண்மனையைத் துறந்து, யமுனை நதிக்கரையில் முற்றும் துறந்த சாதுவாகி, கடவுளைத் தியானிக்கச் சென்றுவிட்டார்.

அந்தக்காலத்தில், டில்லி நகரத்தை அடைவதற்குப் பல வழிகள் இருந்தன. வெகுதொலைவில் உள்ள கிராமத்திலிருந்து வருபவர்கள், முற்றும் துறந்த சாதுவிடம், 'பஸ்தி' அதாவது டில்லி செல்லும் வழியை விசாரிப்பார்கள். அந்த சாதுவோ, ஒரு குறிப்பிட்ட வழியைக் காண்பிக்க, அந்த வழியைப் பின்பற்றிச் சென்றவர்கள், அது டில்லியை அடையாமல் ஒரு சுடுகாட்டை அடைவதைக் கண்டனர். அவர்கள் திரும்பி வந்து அந்த சாதுவை வாய்க்கு வந்தவண்ணம் திட்டினர். வேண்டும் என்றே தவறான பாதையைக் காட்டியதாகப் பழியும் கூறினர்.

ஆனால், சாதுவோ தன் செயலுக்கு மன்னிப்புக் கேட்டு, ''அன்பர்களே! பஸ்தி என்ற வார்த்தையைத் தவறாகப் புரிந்து கொண்டதனால் ஏற்பட்ட குழப்பம் இது'' என்று விளக்க ஆரம்பித்தார். ''பஸ்தி' என்றால் மக்கள் நிரந்தரமாகத் தங்கும் இடம் என்ற மற்றொரு பொருளும் உண்டு. டில்லி போல் உள்ள நகரங்கள் எல்லாம் மக்கள் தற்காலிகமாகத் தங்கும் ஓர் இடமே! அங்குள்ளவர்கள் எல்லோரும் மயானத்திற்குச் செல்வதற்காகவே கூட்டம் கூட்டமாக வரிசையில் நிற்கின்றார்கள். மயானத்திற்குச் சென்றவன்தான் அங்கேயே நிரந்தரமாகத் தங்குகிறான். உள்அமைதியுடனும், வெளிஅமைதியுடனும் வாழ்கிறான். ஆகவே, உண்மையான 'பஸ்தி' என்பது அதுதானே! மக்கள் ஓய்வொழிச்சலில்லாமல் அன்றாட வாழ்க்கையில் நிம்மதியாக இருப்பதற்குச் சிறிதுநேரம்கூடக் கிடைக்காமல் அவதியுறுகிறார்கள். நிரந்தர ஓய்வாக இருப்பதற்காகவே, கடவுள் இந்தச் சாதனத்தைப் படைத்துள்ளார்'' என்று விவரித்தார்.

ஆகவே, புத்திசாலி தன்னுடைய இறுதிக் காலத்திற்குள் விழித்துக்கொண்டு, தன்னுடைய மனதை நாசம் செய்வதினால், நிரந்தர ஓய்வை இங்கேயே பெற்றுவிடுகிறான் அன்றோ?

–ஸ்ரீ சாந்தானந்தபுரி மஹராஜ் அவர்களின்
**Stories for Meditation**
என்னும் நூலிலிருந்து தமிழாக்கம்.

---

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

# சில நினைவுகள்

**– திரு. N. அப்பன் ஐயங்கார்,** ஸ்ரீ ரங்கம்

அடியேனைத் தடுத்தாட்கொண்ட சத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளின் அருள் விளையாட்டை சதா எண்ணிப்பார்ப்பதுண்டு. ஸ்வாமி கூறுவார்கள், ''தபோவனத்தில் நடக்கும் நிகழ்ச்சியை நினைவு கூருங்கள். அதுவே ராமாயணம் படிப்பது, பகவத்கீதை படிப்பதற்கு ஒப்பாகும். தனியாக, தியானமோ வேறு சாதனைகளோ செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்காகவே ஸ்வாமி பல வருடங்கள் கடும் தபஸ் செய்துவிட்டது. அதன் பலன் உங்களை வந்தடையும். ஸ்வாமி சித்து நிகழ்த்தாது. அதில் நம்பிக்கையும் உங்களுக்கு வேண்டாம். திட பக்தியும் குருநாதரின் அருள் மொழிகளிலும் பற்று வைத்து அதன் வழியில் நடந்தால் மற்றதை ஸ்வாமி பார்த்துக்கொள்ளும். ஓம் தேவா!'' என்பார்கள்.

எவ்வளவு எளிய வழி. சாஸ்திரக் குப்பையைத் தூக்கி எறியுங்கள். அது சர்ச்சையைத்தான் வளர்க்கும். குருவிடம் பரிபூர்ண நம்பிக்கைகொண்டு அவர் கூறுவதைக் கேட்டு அப்படியே செய்தால் நடக்க முடியாததெல்லாம் நடக்கும். அதுதான் அருள். அந்த அருள், அற்புதங்களை நிகழ்த்தும். அதுவே குருவருள். இந்த சத்தியவாக்கு அருள் விளையாட்டாக நடந்த சில நிகழ்ச்சிகளை அவர்தம் பக்தர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

காஞ்சி மஹாபெரியவர்கள், ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், நம் ஞானானந்தகிரி ஸ்வாமிகளைக் குறிப்பிடும் போதெல்லாம், அது நிறைகுடம். அவர் ஆசி பரமசுகம் அளிக்கும் என்று கூறுவார்கள். அது முற்றிலும் உண்மை. சங்கீத உலகில் மாமேதையாக, இசைப்பேரரசியாகத் திகழ்ந்த ஸ்ரீமதி. M.S. சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்கள் ஐ.நா. சபையில், இசைநிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போகும் முன்பு, காஞ்சி மஹாஸ்வாமிகளிடம் ஆசி பெற்றபின், நம் குருநாதரிடமும் ஆசி பெற, தபோவனம் வந்தார்கள். நம் ஸ்வாமிகளும் சந்தோஷமுற்று தமது அருளைப் பொழிந்து நல் ஆசிகள் செய்தார்கள். ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள், ஆதிசங்கரர் மரபில் தோடகாச்சாரியார் பரம்பரையில் சிவரத்தினகிரி சுவாமிகளின்

அருளால் ஆட்கொள்ளப்பட்டு, தீட்சை வழங்கப்பட்டவர் என அறிந்து அவர் தோடகாஷ்டகம் என்னும் பதிகத்தைத் தமது இனிய, வசிய, இசை வெள்ளமாகப் பாடி அனைவரையும் மெய்ம்மறக்கச் செய்தார்கள்.

அடுத்தபடியாக, பக்கவாத்தியம் வாசிக்கும் உலகப்புகழ் பெற்ற கடவித்வான் ஸ்ரீமான் வினாயகராம் அவரும் நம் குருநாதரின் ஆசி பெற வந்தார். தனக்கு நல் ஆசி கூறவேண்டும் என்றும் பிரார்த்தித்தார். ஸ்வாமி அவரிடம், ''நீங்கள் என்ன வித்வான்?'' என்றார்கள். ''நான் கடம் வாசிக்கும் பக்கவாத்தியக்காரர்'' என்றார் வினாயகராம். அதற்கு ஸ்வாமி, 'கடம் என்றால் என்ன?' என்று கேட்டார்கள். 'மண்ணால் செய்த குடம் போன்ற அமைப்பில் உள்ளது. பிரத்தியேகமாக, தனிக் கவனத்துடன் பக்குவத்தோடு செய்யப்பட்டால்தான் நாதம் எழும். மானாமதுரையில்தான் கடம் செய்யும் விற்பன்னர்கள் உள்ளனர்' என்றார் திரு. வினாயகராம்.

''ஓ! அப்படியா! மண்குடம் – அதிலிருந்து ஒலி எழுப்பப்படும் தாளவாத்தியமா?'' என்று ஒன்றும் அறியாதவர்போல் கூறிவிட்டு, ''இங்கு ஒரு மண்குடம் உள்ளது. இங்குள்ள ஞான வேணுகோபாலன் சன்னிதி கும்பாபிஷேகத்துக்குத் தயிர்கொண்டு வரப்பட்ட பெரிய மண்பானை. வெகுநாட்களாக கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கிறது'' எனக் கூறி அருகிலுள்ள தபோவனத் தொண்டரைப்பார்த்து அந்த மண் பானையை எடுத்து வரச் செய்தார். பானை மேல் உள்ள தூசுகளை தட்டிவிட உத்தரவிட்டு அதை, திரு. வினாயகராமிடம் கொடுக்கச் செய்தார்.

அவரும் ஸ்வாமியை சாஷ்டாங்கமாக சேவித்து எழுந்து, ''ஸ்வாமி சன்னதியில் பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட கட வாத்தியம் தேவையில்லை. ஸ்வாமி அருள் இருக்கையில் தயிர்ப் பானையில் தாளம் தப்பாமல் வாசிக்கலாம்'' என்று கூறி ஒரு மணி நேரம் பிரமாதமாகக் கூடியிருந்தோர் வியக்க வாசித்து முடித்தார். சுவாமியும் பரிபூர்ண ஆசி செய்து, ''இங்கு வாசித்தாயிற்று. அமெரிக்காவிலும் சிறப்பாக வாசிப்போம்'' எனக் கூறி நிறைய, பழங்கள், விபூதி, குங்குமம் பிரசாதமாக அளித்தார்கள்.

தன்னை நாடி வந்த பக்தனுக்குத் தனது அருளைப் பொழிந்தார். அது அற்புதத்தை நிகழ்த்தியது. ஸ்வாமியால் தனக்குப் பரிபூர்ண கிருபை உண்டாகும் என திடநம்பிக்கை கொண்ட திரு. வினாயகராமுக்குப் பலன் கிடைத்தது. தனக்கு ஸ்வாமியின் அருள் கிடைத்துவிட்டது என்பதற்காகத் தயிர்ப் பானையில் வாசிக்கலாமா? வெளிநாடு செல்லப்போவதால் மானாமதுரைக்கு நேரில் சென்று கடம் செய்யும் விற்பன்னர்களை நேரில் சந்தித்து, கேட்ட தொகையைக் கொடுத்து, 4 கடங்களைப் பரீட்சை செய்து, தேர்ந்தெடுத்துக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து, ராமேஸ்வரம் - சென்னை Expressக்கு டிக்கட் பெற்று, ரிசர்வேஷன் பெட்டி நிற்கும் இடத்தில் நின்று கொண்டிருந்தார். ரயிலும் வந்தது. ரிசர்வேஷன் கோச்சில் நான்கு பெட்டிகள் இருந்தன. ஒவ்வொரு T.T.Rஆக, சென்னை செல்ல இடம் கேட்டார். ''நான்கு பெரிய பானைகளை வைத்துக்கொண்டு எப்படி ஒரு பர்த்தில் நீங்கள் இருப்பீர்கள். பிறருக்கும் இடைஞ்சல்'' எனக் கூறி, நான்கு T.T.Rகளும் இடம் தரமறுத்தார்கள். இனி அடுத்தாற்போல் ராமேஸ்வரம் – சென்னை பாசஞ்சர்தான் கதி. இரவு ஒரு மணிக்கு வந்து சென்னைக்கு மாலை 5 மணிக்குப் போய்ச் சேரும். இப்போது இரவு 8 மணி. ஐந்து மணி நேரம் பிளாட்பாரத்திரத்தில் நேரத்தைப் போக்க வேண்டும். வேறு வழி?

எடுத்துக்கொண்டு வந்த பொருளோ எளிதில் உடையக் கூடியது. ஜாக்கிரதையாகக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். ''ஞானானந்தா! இதற்கும் தாங்கள்தான் வழி காட்ட வேண்டும்'' என்று கூறி பிரார்த்தித்தார். இரவு 1 மணிக்கு பாசஞ்சர் வண்டி மானாமதுரை பிளாட்பாரத்தில் நுழைந்தது. எளியேன்தான் ரிசர்வ் பெட்டியில் பணியில் இருந்தேன். அப்போது T.T.Rகளுக்கு 64 எண்ணுள்ள பர்த் ஒதுக்கப்பட்டிருக்கும். வேறு யாருக்கும் அதைக் கொடுத்தால் தண்டனை பெறுவார்கள். அப்போது பெர்த்துக்கு ரூ. 2¾ சார்ஜ். வேறு பர்த் காலியாக இல்லை. கையில் இரண்டு பானைகளுடனும் பக்கத்தில் கூலி போர்டர் 2 பானைகளைச் சுமந்த வண்ணமுடன் ஒருவர், ''Sleeper Coachல் பெர்த் கிடைக்குமா?'' என்று கேட்டார்.

எப்போதும் எளியேன் பயணிகளிடம் அன்பாகவே நடந்து கொள்வது வழக்கம். ''ஐயா! ரிசர்வ் பெட்டியில் இடம் இல்லையே'' என்று அன்பான முறையில் நான் சொல்லியதும், ''சத்குரு ஞானானந்தா! ஏன் இந்தச் சோதனை!'' என்று கூவியேவிட்டார். எனக்கோ பேரதிர்ச்சி! ''ஐயா! என்ன கூறினீர்கள்? சத்குரு ஞானானந்தா என்றா? அவரைத் தெரியுமா?'' என்றும் கேட்டுவிட்டேன். ''தெரியுமாவா? அவர்தான் என்னை அருள் ஆட்சி செய்பவர். அவர் ஆசி பெற்றவன் நான்'' என்றார். ''தபோவனம் சென்றபோது தயிர்ப் பானையில் திரு. வினாயகராம் கடம் வாசித்தது கேள்விப்பட்டதுண்டு. ஆனால், உங்களை நான் பார்த்தது கிடையாது. எளியேனும் அவர் நாமாவை சதா உச்சரித்துக்கொண்டு அவர் அருளில் இருப்பவன்'' எனக் கூறினேன். ''நீங்கள்தான் திரு. வினாயகராமா?'' என்றேன். தனது ஜிப்பாவில் கைவிட்டு விசிட்டிங்கார்டை எனக்குத் தந்தார்.

அவ்வளவுதான். T.T.R பெர்த்தைத் தேவையான நபருக்கு வழங்கத் தீர்மானித்தேன். சும்மாதானே தரக்கூடாது; ரூ. 2¾ வாங்கி ரசீது போட்டேன். நான்கு கடங்களும் பெர்த்தில் வரிசையாக அமர்ந்தன. தனியாக T.T.Rக்கு நடைபாதையில் சீட்டு உண்டு. அதில் எளியேனும் என்னுடைய Line Box மேல் திரு. வினாயகராமும் உட்கார்ந்து திருச்சி வந்து சேர்ந்தோம். இரவு 1 மணி முதல் விடியற்காலை 4 மணி வரை இருவரும் சத்குருவின் அன்பையும் அருளையும் பேசி வந்தோம். எப்படி தனது அடியவனைக் கொண்டு உதவச் செய்தார்! என்று கூறி திரு.வினாயகராம் மகிழ்ந்து போனார். திருச்சி வந்ததும் எனது பணி முடிந்ததை அறிவித்துவிட்டு எனக்குப்பதில் பணியில் போகும் T.T.Rயிடம் அவரை நன்றாகக் கவனித்துக்கொள்ளச் சொல்லிவிட்டு இல்லம் சென்றேன்.

எளியவனின் சேவையை ஏற்று, குருவுக்குத் தொண்டாற்றும் பாக்கியத்தை ஒருசமயம் ஞானானந்தகிரி ஸ்வாமிகள் நேரிடையாக அனுக்கிரகித்தார்கள். திரு. வினாயகராமுக்கு உதவும் வகையில் எளியேனுக்கு மீண்டும் ஒரு பாக்யத்தை அளித்தார். சத்குரு ஞானானந்தாவின் பக்தனுக்கும் கைங்கர்யம் செய்யும் பாக்கியம் கிடைத்து. நான் பெற்ற பாக்கியமே!!

ஞானாநந்தம் . . பரமானந்தம்.

# மாலே மணிவண்ணா - 30

**– மஹாவித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்**

விஷ்ணுபுராணம், பகவான் அம்சபூதராக உலகில் தோன்றியதை எடுத்துச் சொல்கிறது. பாகவத புராணமோ, பகவான் இதுவரை அவதாரம் எடுத்துள்ளவை இருபத்தொன்று என்று கூறி, இனி எடுக்கப்போவது 'கல்கி' அவதாரம் என்றும், அது இருபத்திரண்டு என்றும் கூறுகிறார்கள். அதனோடு மேலும் இரண்டு அவதாரங்கள் உண்டு என்று அவற்றின் பெயர் சொல்லாமல் சொல்கிறது.

பாகவத புராணப்படி ஞானிகள் அன்றி யாராலும் எக்காலத்தும் காணமுடியாதவராகிய விஷ்ணு, காணச்சிறந்த முகங்களை உடையவர். அவற்றிலிருந்து, தேவை ஏற்படும்போது தன்னிச்சையால் குறிப்பிட்ட அவதாரங்களை எடுக்கிறார் என்பது அறியப்படுகிறது. நாம் அறிந்த தசாவதாரங்கள், இந்த இருபத்திரண்டில் இடையிடையே கலந்து சொல்லப்படுகின்றன. இதில், முதல் அவதாரமாகச் சொல்லப்படுவது 'விராட்புருஷன்' ஆகும்.

விஷ்ணுவிற்கே உரியதான கரு நீலநிறச்சாயை, பீதாம்பரம், சேஷ சயனம் என்பவை எதுவும் இன்றி முழு வெண்மை என்னும்படி, ஓர் வடிவம் பாகவதத்தில் வருகிறது. ருஷபயோகி சரித்திரத்தில், (5–3–20) 'சுக்லயா தநுவா அவதார' என்ற குறிப்பு உள்ளது. ''சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்'' என்ற சுலோகத்தால் மஹாவிஷ்ணுவைத் தியானிப்பவர்களும் வெண்ணிற ஆடை உடுத்தியவராக, சந்திரனது நிறம் கொண்டவராகத் தியானிப்பர். இந்த சுத்த சத்துவ மூர்த்தியே மாயையால் உலகப் படைப்பு நினைவினால் பலவாகத் தோன்றுகிற பெருவடிவாக, விராட்–ஹிரண்ய கர்ப்ப, ஈச்வர ரூபம் எடுக்கிறார். இந்த சுத்த சத்துவப் பெருவடிவமே விராட் ரூபமாகும் அவதாரம். இத்தனை செய்திகளையும் நம் மனத்தில் கொள்ளுமாறு பரிபாடல், திருமாலைத் தோத்திரம் செய்கிறது.

*''முதன் முறை இடைமுறை கடை முறை தொழிலின்*
*பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே''*

உலகில் முதலிலும், இடையிலும், இறுதியிலும் படைப்பு, காப்பு, அழிப்பு என்னும் தொழில் வேற்றுமை பற்றிப் பிறவாப்

பிறப்புடையை அல்லை. அவ்வாறு பிறந்து வைத்தும் பிறப்பித்தோரை உடையை அல்லை என்பது பரிமேலழகர் உரை. மற்றவர்கள் பிறந்தது போலத்தான் நீயும் பிறக்கிறாய், பிறக்கின்ற பிறப்பு உடையவனே ஆயினும் உன்னைப் பிறப்பித்தவர்கள் இல்லை என்பதே அவ்வுரையின் கருத்தாகும். இக்கருத்து மேல் விளக்கப்பட்டு உள்ளது.

'பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்' என்ற மாணிக்கவாசகர் வார்த்தைப்படி பிறந்த நம் பிறப்பை அறுக்க வேண்டி அவன் பிறக்கிறான். நம்மைப் போலவே பிறக்கிறான். நாம் ஏற்று நெருங்குமாறு அவன் பிறவிகள், 'பிறவாப் பிறப்புடையன அல்ல'. தன் அத்புத கடினா சாமர்த்தியத்தால் தோன்றவல்லவன். அவனாயினும் நம்மைப் போலப் பிறந்தால்தான் நாம் அவனைத் தந்தையாக, தாயாக, சோதரனாக, தோழனாக, ஆசார்யனாக, அரசனாக நெருங்குவோம் என்று கருதிப் பிறக்கிறான். ஒவ்வோர் உயிரினவாகவும் பார்க்கிறான். இதனை,

> *''என் பிறவி எண்பத்து நான்கு நூறாயிரமும்*
> *தன் பிறவிபத்தால் தணித்திடுவோன்''*

என்று 'அழகர்கிள்ளைவிடுதூது' குறிப்பிடுகிறது.

'மானைக்காட்டி மானைப் பிடிப்பார்போல' ஆருயிர்களை வசப்படுத்தவேண்டி அவ்வுயிர்கள் போலவே வந்து பிறந்து அவற்றை வசப்படுத்தி, ''வஷட்காரக:' என்ற மூன்றாவது திருநாமத்தைத் தனக்குரியதாக மெய்ப்பிக்கிறான் பகவான்.

இனி, 'பிறவாப் பிறப்பு இலை பிறப்பித்தோர் இலையே'' என்ற பரிபாடல் வரிக்கு நம் கருத்தில் ஓர் உரை காணலாம். ''நீ பிறவாத பிறப்பு எதுவும் இல்லை; நான் எப்படி எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேனோ அப்படி நீயும் பல்வேறு யோனிகளாகவும் பிறந்து பிறவிதோறும் என்னை எடுத்தாய்; ஆனால், பிறவிதோறும் எனக்குப் பிறப்புக்குக் காரணமான பெற்றோர்கள் உண்டு; உனக்கோ உன்னைப் பிறக்கச் செய்வார் ஒருவரும் இல்லை. என்பால் உள்ள கருணையால் என்னை உய்விக்கவேண்டி உன்னை நீயே பிறக்கச் செய்து கொள்கிறாய் என்பதாகவும் கொள்ளலாம். இதுவும், பகவானது சௌசீல்யத்தையும் சௌலப்யத்தையும் (பெருமையையும், எளிமையையும்) நமக்கு அறிவிப்பதாக அமைகிறது. (தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 30

உலகத்தின் நியதி என்னவென்றால் முதலில் உழைப்பு. பிறகுதான் பலன். முதலில் பாடுபட்டு, கிணறு தோண்டினால்தான் இறுதியில் நீர் அருந்த முடியும். ஆனால், ஆன்மீக வாழ்க்கையின் நியதி சில சமயங்களில் இதற்கு நேர்மாறாக இருக்கும். முதலில், சித்தி கிடைத்துவிடும். பிறகு, சாதனை தொடரும். இறைவனின் க்ருபைக்குப் பாத்திரமான சில நித்ய சித்தர்களின் வாழ்வில் இம்மாதிரி நிகழ்ந்துள்ளது. கடவுளின் அருள் பெற்ற இந்த சித்தபுருஷர்கள் உலகில் பிறந்து சித்தி பெறுவதற்கு எந்த சாதனையும் தேவை இருக்காது. அவர்கள், கடவுளின் விருப்பப்படி உலகத்திற்கு சாதனை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக இருப்பதற்காகத் தோற்றுவிக்கப்படுகிறார்கள்.

அவர்கள் உலகில் பிறந்தால் சித்தி பெறுவதற்காக விசேஷமாக சாதனை செய்யத் தேவையில்லை. கடவுளின் கருணை மழையாலே சித்திகள் அவர்களிடம் தாமே வந்தடையும். மேலும், பகவானின் க்ருபை சாதனையை எதிர்பார்ப்பதும் இல்லை. இறைவன் பூரண சுதந்திரன். அவருக்கு யார்மீது விருப்பம் ஏற்படுகிறதோ அவர் மீது கருணையைப் பொழிகிறான். சில சமயங்களில் ஒரு சாதனையும், பஜனையும் செய்யாத ஒருவர்மீதும் அவன் அநாயாசமாக கருணையைப் பொழிவான். பகவானது கருணையைப் பெற்ற உடன் அந்த ஜீவன் இறைவனின் பஜனையைத் தவிர வேறு எதுவும் செய்ய மாட்டான். முதலில் க்ருபை, பிறகு சாதனை என்றாகிவிடும் அந்தப் பக்தரின் வாழ்க்கை. இப்படிப்பட்ட க்ருபையைப் பெற்ற ஒரு மஹாத்மாதான் ஸ்ரீ ஸ்வாமி பலதேவ்தாஸ். அவருக்குப் பால பருவத்திலேயே பகவத்ப்ராப்தி ஏற்பட்டது. அதன்பிறகு தடையின்றி பஜனைமயமான, பாவனமான, நிர்மலமான ஓடை போன்ற வாழ்க்கை அமைந்தது அவருக்கு.

பலதேவ்தாஸ், வ்ரஜத்தைச் சேர்ந்த ஒரு ப்ராஹ்மண குலத்தில் பிறந்தார். எட்டுவயதிலே அவரது பெரிய தமையனார் இறந்தவுடன் ஏற்பட்ட துக்கத்தினால் அவர் வீட்டைத்துறந்து துவாரகை செல்லும் சாதுக்கள் கூட்டத்துடன் கலந்துவிட்டார். அவர் துவாரகை அடைந்து ரண்சோட்ஜீயின் கோவிலுக்குச் சென்றபோது பகவானுக்கு ''போக்''

நைவேத்யம் நடந்துகொண்டு இருந்தது. கோவிலின் வாயிலில் திரை போடப்பட்டிருந்தது. பூஜாரியான ஜகன்மோஹன் இங்கும் அங்கும் நடந்துகொண்டு இருந்தார். அப்போது திடீரென்று பல்தேவ்தாஸுக்கு ஓர் ஆவேசம் ஏற்பட்டு பூஜாரி திரும்பி இருக்கும் சமயத்தில் திரையை விலக்கிக்கொண்டு கோவிலுக்கு உள்ளே நுழைந்துவிட்டார். அங்கு அவருக்கு பகவானின் திவ்ய தரிசனம் ஏற்பட்டுவிட்டது. அங்கு அவர், மூர்த்தி ரூபத்தில் பகவான் சிம்மாசனத்தில் இருப்பதையும், நிஜரூபத்தில் கீழே அமர்ந்து உணவு உண்பதையும் கண்டார். தன் நினைவின்றி அந்தக்காட்சியில் உறைந்து போனார்.

சிறிது நேரங்கழித்து, ''போக்'' அருந்திய பகவான் மறைந்ததும் பலதேவ்தாஸ் மௌனமாகத் திரையை விலக்கிக்கொண்டு வெளியே வந்தார். அவர் உள்ளே போனதையும் வெளியே வந்ததையும் யாரும் கவனிக்கவில்லை. அதனால், அவரை யாரும் தடுத்து நிறுத்தவோ கேள்வி கேட்கவோ இல்லை. இறைவனே விரும்பித் தரிசனம் தர முடிவு செய்தபிறகு என்ன தடை நேரும்?

அன்றிரவே ரண்சோட்ஜி (பகவான்) பலதேவ்தாஸுக்கு கனவில் தோன்றி, ''தில்லிக்கு அருகில் உள்ள 'லக்ஸர்' என்னும் கிராமத்தில் என்னுடைய பரமபக்தர் டாகுர்தாஸ் இருக்கிறார். அவரிடம் சென்று தீக்ஷைப் பெற்று, அவர் சொல்லித்தரும் முறையில் பஜனை செய்'' என்று கட்டளை இட்டான். இதேபோல், டாகுர் தாஸுக்கும், அவர் கனவில் தோன்றி, ''என்னுடைய பக்தன் பல்தேவ்தாஸ் உன்னிடம் வருவான். சிறுபையன் என்று அவனை உதாசீனப்படுத்தாமல் அவனுக்கு தீக்ஷை அளித்து பஜனையின் முறையெல்லாம் கற்றுக் கொடு'' என்று கட்டளை இட்டார் துவாரகாதீசன்.

துவாரகையில் இருந்த பலதேவ்தாஸுக்கு தில்லிக்குச் செல்லும் வழியும் தானாகவே தோன்றியது. துவாரகையில் அவருக்கு தில்லிக்குச் செல்லும் சாதுக்களின் பரிச்சயம் கிடைத்தது. அவர்கள் பல்தேவ்தாஸை அன்புடன் அரவணைத்துக்கொண்டு லக்ஸரிலுள்ள டாகுர்தாஸிடம் அழைத்துச் செல்வதாக வாக்கு அளித்தனர். அதேபோல், கூட்டியும் சென்றனர். அவரைப் பார்த்ததுமே டாகுர்தாஸ், ''வா குழந்தாய்! உன்னைத்தான் எதிர்நோக்கி இருந்தேன்'' என்று கூறி, மார்புடன் அணைத்துக்கொண்டு மந்திரதீக்ஷை அளித்து பஜனை செய்யும் முறைகளையும் கற்றுத்தந்தார். பல்தேவ்தாஸ் குருவுடன்

இருந்துகொண்டு அவரது இஷ்டதெய்வமான ஸ்ரீ யுகளபிஹாரிக்கு மனதாலும் உடலாலும் சேவை புரிந்து வந்தார். சிறுவயதிலேயே பகவானுக்குச் செய்ய வேண்டிய தொண்டின் விதிகளைப் பூர்ணமாகக் கற்றுத் தேர்ந்தான். யுகளபிஹாரிக்கு உணவு தயாரிப்பதையும் அவனே செய்தான்.

டாகுர்தாஸ் சிறந்த மஹான் ஆவார். ஒரு சமயம், அவரது ஆஸ்ரமத்திலுள்ள ஒரு சிப்பந்தி திடீரென்று இறந்துவிட்டார். போலீஸ் அதிகாரிகள் ஆஸ்ரமவாஸிகளை விசாரணை என்ற பெயரில் துன்புறுத்த ஆரம்பித்தனர். அப்பொழுது டாகுர்தாஸ், பிணத்தின் அருகில் வந்து காலால் உதைத்து, ''எழுந்திரு! சாதுக்களுக்கு ஏன் கஷ்டம் கொடுக்கிறாய்?'' என்று இரைந்தார். உடனே அந்தப் பிணம் உயிர் பெற்றுத் திடீரென்று எழுந்து நின்றது. அனைவரும் திகைத்தனர். அன்றிலிருந்து டாகுர்தாஸை அனைவரும் பெரிய சித்த புருஷராக மதித்தனர்.

டாகுர்தாஸ், மானஸ பூஜையில் இரண்டு நாட்கள்வரை ஒரே ஆசனத்தில் அமர்ந்திருப்பார். சரீர நினைவே அறவே அவருக்கு இருக்காது. ப்ரசாதம் சாப்பிடும்போது அவர் சில சமயம் அழுவார். சில சமயம் சிரிப்பார். பலதேவ்தாஸுக்கு இது மிகவும் வியப்பை அளிக்கும். காரணம் கேட்கும்பொழுதெல்லாம் டாகுர்தாஸ் பதில் சொல்லாமல் தவித்துவிடுவார். ஒருநாள் பலதேவ்தாஸ், குருவிடம் காரணம் தெரிந்துகொள்ள மிகவும் அடம்பிடித்தார். அப்போது டாகுர்தாஸ் சொன்னார். ''நான் உணவு அருந்தும்போது கோபாலன் என்னுடன் அமர்ந்துவிடுகின்றான். என் இலையிலிருந்து உணவை எடுத்து உண்கிறான். என் எச்சிலை உண்கிறானே! என்று வருத்தத்தால் சில சமயம் அழுவேன். என்னிடம் எவ்வளவு ப்ரேமையுடன் இருக்கிறான் என்று மிகவும் ப்ரஸன்னமாகி சிலசமயம் சிரிப்பேன்!'' என்றார். இப்படி, தனது ரஹஸ்யமான சில அனுபவங்களை டாகுர்தாஸ் பலதேவ்தாஸிடம் பகிர்ந்துகொண்டார். குருதேவரின் சான்னித்யத்தால் பலதேவ்தாஸின் பக்திபாவம் நன்றாக வளர்ந்தது. அவரும் குருவைப் போன்று மானஸீக பக்தி செய்யலானார்.

சில தினங்களில் குருதேவர் இறைவனடியை அடைந்தார். பலதேவ்தாஸ் அந்த இடத்தில் மஹானாக ஆக்கப்பட்டார். ஆனால், அவருக்கு புகழ், பதவி இவற்றில் விருப்பமில்லை. தன் குருபாயியிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அவர் யாத்திரை கிளம்பி

விட்டார். இறுதியில் வ்ருந்தாவனம் வந்து சேர்ந்தார். அங்கு ஸந்த் கோவிந்ததாஸிடம் சேர்ந்து தன் வாழ்நாளைக் கழிக்கலானார். தனக்கென்று ஒரு குடிசைகூட ஏற்படுத்திக்கொள்ளவில்லை. சுக சம்ப்ரதாயத்தைச்சேர்ந்த ஸந்த் மோஹன்தாஸ் என்பவருடன் சேர்ந்து சத்சங்கம் செய்வார். ராதாக்ருஷ்ண ரஹஸ்யலீலைகளைப் பற்றி ரஸமயமாக சம்பாஷணை செய்து மகிழ்வார்.

தினமும் காலையில் மூன்று மணிக்கு பலதேவ்தாஸ் வ்ருந்தாவன் பரிக்ரமா ஆரம்பிப்பார். ஒருநாள் பரிக்ரமா பாதையில், அவர் ஓரிடத்தில் நிறைய சாதுக்கள் ப்ரஸாதம் பெற்றுக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர்கள் பலதேவ்தாஸையும் ப்ரஸாதம் பெற்றுக்கொள்ளச் சொன்னார்கள். அவர், ''நான் இப்போது ப்ரசாதம் சாப்பிட மாட்டேன்'' என்று சொல்ல அவர்கள் ப்ரசாதத்தைக் கட்டிக்கொடுத்தனர். அதை அவர் தமது மேல் வஸ்த்திரத்தில் மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்து தனது குடிசையில் வந்து பிரிக்க அதில் உண்ணத் தகாத வஸ்து நிரம்பி இருப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்து வஸ்த்திரத்துடன் அதை எறிந்துவிட்டு யமுனையில் நீராடி, தன்னை சுத்தப்படுத்திக் கொண்டார்.

அடுத்தநாள் பரிக்ரமா செல்லும்போது சாது ரூபத்தில் சில பூதங்களை அவர் கண்டார். அவர்கள் முந்தைய தினம் அவர் முன் தோன்றி ப்ரசாதம் என்று தந்தவர்கள்தான். அவர்களிடம் பலதேவ்தாஸ் ''உங்களுக்கு ஏன் இந்த கதி ஏற்பட்டது?'' என்று கேட்டார். அவர்கள், ''நாங்களும் ப்ருந்தாவனத்தைச் சேர்ந்தவர்கள்தாம். டாகுர் சேவைக்காகக் கிடைத்த பணத்தையும் பொருளையும் நாங்களே அனுபவித்துக்கொண்டோம். அதனால் இவ்வாறு பிறந்து தவிக்கிறோம். வ்ருந்தாவனத்தில் வசித்ததால் யமனுக்கு எங்கள்மேல் யாதொரு அதிகாரமும் உண்டாகவில்லை. அதனால் நாங்கள் இங்கேயே பூதேஸ்வரருக்கு அடிமையாக எங்களது கர்மபலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்'' என்றனர்.

பலதேவ்தாஸ் நல்ல சங்கீதம் தெரிந்தவர். தம்புராவுடன் ஆவேசத்தில் டாகுர்ஜிக்கு முன்பு மனமுருகிப் பாடுவார். ஸ்ரீமத் பாகவத பாராயணம் தினமும் செய்வார். ஜபம் நிறையச் செய்வார். வ்ரஜத்திலுள்ள மரத்தினடியில் அமர்ந்து மணிக்கணக்கில் கிருஷ்ணலீலா ஸ்மரணம் செய்வார். பசி என்ற உணர்வே அவருக்கு இருக்காது.

ஒருமுறை பர்ஸானாவில் ஆவேசத்துடன் மூன்று நாட்கள் ஒரே இடத்தில் அமர்ந்து பஜனை செய்தார். யாரிடமும் எதுவும் கேட்க மாட்டார். ஸ்வயம் ராதாராணியே தனது பூஜாரியிடம் கனவில் தோன்றி, ''என் பக்தன் இங்கு மூன்று நாட்களாக ஆகாரமின்றி இருக்கிறான். என் ப்ரஸாதத்தை அவனுக்குக் கொடு'' என்று ஆணையிட பூஜாரி அவரைத் தேடிக் கண்டுபிடித்து ப்ரஸாதம் தந்தான். பலதேவ்தாஸ் கண்ணீர் பெருக்கிக்கொண்டே அந்த ப்ரஸாதத்தை ஏற்றார்.

பிறகு தனக்கு ஏதாவது புகழ் வந்துவிடப் போகிறதே என்று பயந்து, அந்த இடத்தை விட்டு அகன்று அருகிலுள்ள வனத்தில் ஏகாந்தத்தில் அழுதுகொண்டே ராதாராணியை நினைத்து, ''ஹே கருணாமயி! இந்த அதமனின் மீது இத்தனை கருணையா உனக்கு! ஏன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துகொண்டு எனக்கு விரஹ வேதனையைத் தருகிறாய்! மறைமுகமாக க்ருபை செய்து என் வருத்தத்தை அதிகரிக்கச் செய்கிறாயே! ப்ரத்யக்ஷமாக இல்லாமல் என் ப்ராணனை வதைக்கிறாயே! இன்னும் எத்தனைகாலம் என்னைத் தவிக்கவிடுவாய் என் ஸ்வாமினி'' என்று மனமுருகிப் புலம்பினார்.

அப்போது, அவர் நிதர்சனமாக, ராதாராணி தன் தோழிகளுடன் புஷ்பங்கள் சேகரித்துக்கொண்டே அவரைக் கருணையுடன் நோக்கி, ''அட பைத்தியமே! நான் எங்கு உன்னை விட்டுத் தூரத்தில் இருக்கிறேன்!'' என்று கூறுவதைக் கேட்டார். அன்றிலிருந்து அவர் மானஸீகமாக ராதாக்ருஷ்ணனின் எட்டுக் கால பூஜையில் மக்னமாகி விட்டார். சரீர நினைவே அற்றுவிட்டது அவருக்கு. தனக்கு ஒரு யோக்யமான சிஷ்யன் கிடைத்தால் தனது டாகுரையும் குருதேவரின் பாதுகையையும் ஒப்படைத்துவிடலாம் என்று நினைத்தார். அப்போது ராதாராணியே அவரை ஆல்வாருக்கு அருகிலுள்ள பஹாதுர்புர் செல்லுமாறு பணித்தாள். அங்கு பிஹாரிஜியின் மந்திரத்தில் ஸ்ரீ சிவதயாள்ஜி என்ற இளைஞனை அவர் சந்தித்தார். அவர்தான் தனக்கு ஏற்ற சிஷ்யன் என்ற அவருக்கு உள்ளத்தில் உதித்தது. தனது இஷ்ட மூர்த்தியையும், குரு பாதுகையும் அவனிடத்தில் ஒப்படைத்தார். பிறகு தனது சரீரத்தைத் தவிர ஓர் உடைமையும் இன்றி ராதாக்ருஷ்ண த்யானத்தில் ஆழ்ந்தார். பிறகு தனது சரீரத்தையும் ஆஷாட மாதத்து சுக்லபக்ஷ நவமியன்று பூமாதேவிக்கு அர்ப்பணித்துவிட்டு ராதாக்ருஷ்ணனின் திவ்ய உலகத்தை அடைந்தார். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் சம்பாஷணைகளிலிருந்து – 111

*தெய்வமென்றுன்னைச் சாரவே என்னைச் சேர*
*வொழித்தாய் அருணாசலா*

மஹாத்மாக்களின் தரிசனமும் அவர்களுடைய திருநோக்கும் எந்தப் பலனைத் தருமோ அதை வேறு எந்த சாதனையும் தராது என்பதற்குப் பல மஹாத்மாக்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். காஞ்சி மஹாஸ்வாமிகளிடம் ஒரு மாதுஸ்ரீ பக்தி கொண்டிருந்தார். அவரின் கணவரோ, பரம லௌகீகர். (அதாவது உலக சம்பந்தமான விஷயங்களில் மட்டுமே ஈடுபடுவார். ஆன்மீகம் சம்பந்தமான விஷயங்களில் ஈடுபாடு அற்றவர்). காஞ்சிமஹாஸ்வாமிகளுக்கு பிக்ஷை செய்து வைக்க வேண்டும் என்று வெகுநாட்களாக அந்த மாதுஸ்ரீ ஆசைப்பட்டுக் கொண்டு இருந்தார். ஆச்சார்யர் அவர்கள் ஒருசமயம் ஓரிடத்தில் campல் இருந்த சமயத்தில் தனது கணவருடன் தரிசனத்திற்குச் சென்றார்.

அவர் கணவர் காலில் ஷு போட்டுக்கொண்டு, பேண்ட் அணிந்து, சட்டையும், 'டை'யும் அணிந்து வந்திருந்தார். அந்தப் பெண்மணி மிகுந்த பயபக்தியுடன் நின்றுகொண்டிருந்தார். அவர் கையில் தட்டு. அந்தத் தட்டில் பழங்களும், பிக்ஷைக்கு வேண்டிய பொருட்களும் வைக்கப்பட்டு இருந்தன. ஆனால், அவரின் கணவரோ, தாம் ஒரு மிகப்பெரிய மஹாத்மாவின் முன் நின்றுகொண்டிருக்கிறோம் என்பதைச் சற்றும் அறியாத வகையில், மிகவும் அலட்சியமாக நின்றுகொண்டிருந்தார். இதைப் பார்த்த அந்தப் பெண்மணி, மேலும் பதற்றமடைந்தார். மிகவும் வருத்தப்பட்டு, ஆசார்ய ஸ்வாமிகளிடம், 'இவருக்கும் உங்களிடம் பக்தி வரவேண்டும். இவரை நீங்கள்தாம் ஆட்கொள்ள வேண்டும்' என்று மனதில் கேட்டுக்கொண்டார்.

அந்த மாதுஸ்ரீ, இப்படி மனதில் ப்ரார்த்தனை செய்து கொண்டவுடனே, காஞ்சி மஹாஸ்வாமிகள், தாம் அமர்ந்திருந்த மேனாவிலிருந்தபடியே, அவரை ஒரு பார்வை பார்த்தார். அவ்வளவு தான் நடந்தது. மஹாஸ்வாமிகள் மேற்கொண்டு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அப்பெண்மணி தன் கணவருடன் மஹாஸ்வாமிகளின்

திருவடிகளில், தாம் கொண்டுவந்திருந்த தட்டைச் சமர்ப்பித்துவிட்டு சென்றுவிட்டார்.

வீட்டிற்குத் திரும்பிப் போன பின், சில நாட்கள் கழித்து அந்த மாதுஸ்ரீயின் கணவர், அவரிடம், 'ஸ்வாமிகளைத் தரிசனம் செய்து விட்டு வரலாமா' என்று சொல்லி, தரிசனத்துக்கு வந்து சென்றார். இம்முறை அவர் பேண்ட் அணிந்துகொள்ளவில்லை. வேஷ்டி அணிந்திருந்தார். சட்டை போட்டிருந்தார்.

மறுபடி சில நாட்கள் கழித்து அவராகவே, ''மஹாஸ்வாமிகள் தரிசனத்துக்குப் போகலாமே'' என்று மஹாஸ்வாமிகளைத் தரிசனம் செய்துவிட்டுப் போனார். இம்முறையோ பஞ்சகச்சம் அணிந்திருந்தார். ஸ்வாமிகளைத் தரிசனம் செய்யும்பொழுது சட்டை போடவில்லை. பக்தியுடன் நடந்துகொண்டார்.

இதுபோலவே, சிறிது சிறிதாக மாறிக்கொண்டு வந்தவர், சில நாட்களில் எப்படி மாறினார் என்றால், உத்தியோகத்தை விட்டு விட்டார். மஹாஸ்வாமிகளின் படத்தை வீட்டில் வைத்துக்கொண்டு பஜனை செய்துகொண்டு பரம பக்தராகிவிட்டார். இவ்வளவு அவர் மாறியதற்கும் ஆசார்ய ஸ்வாமிகள் அவரிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. தனது திருநோக்கு ஒன்றினாலேயே அவரை முழுவதுமாக மாற்றிவிட்டார்.

ஆக, மஹான்களின் திருக்கண்ணோக்கத்தில் வரும் அருளை எந்த ஒரு தீர்த்த யாத்ரையோ, க்ஷேத்ராடனமோ கொடுத்து விடமுடியாது. அப்படி ஓர் உத்தமமான மஹாத்மாவின் ஸங்கத்தில் இருந்தும், நமக்குத் தீர்த்தயாத்திரை, க்ஷேத்திராடனம் போன்ற விஷயங்களில் புத்தி செல்லுமானால், நமக்கு திடநம்பிக்கை ஏற்படவில்லை என்றே அர்த்தம்.

*'தெய்வமென்றுன்னைச் சாரவே என்னை . . .'*

ஒரு மஹாத்மாவை, மஹாத்மா என்று புரிந்து, பிரியமுடன் ஆத்மசமர்ப்பணம் செய்வதால், நமது ஹ்ருதயத்தில் உள்ள வாஸனைகள் எல்லாம் அழிந்து, மிகவும் உன்னத நிலை சித்திக்கும். அத்தகைய அருளை எனக்கு அளித்தாயே, அருணாசலா என்று சொல்கிறார் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள்.

(தொடரும்)

# செய்திகள்

### ஜனவரி 22, 23 தேதிகள்

பெங்களூர், மல்லேஸ்வரம், ஸ்ரீராம்மந்திரத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி குத்துவிளக்கேற்றி ராதாகல்யாண மஹோத்ஸவத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பெங்களூர் ஸ்ரீ நரஸிம்மமூர்த்தி, சிறப்பான முறையில் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். மஹாரண்யம் ஸ்ரீ விஷ்ணுராத பாகவதர் குழுவினரால் நடைபெற்ற ராதாகல்யாண வைபவத்தில், ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

### ஜனவரி 30–ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் ஆராதனையை முன்னிட்டு திவ்யநாமகீர்த்தனம் நடைபெற்றது. ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனைகள் பாடப்பட்டன.

### பிப்ரவரி 5–ந் தேதி

ஏகாதசியை முன்னிட்டு மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி திருமஞ்சனம் செய்தார்கள்.

### பிப்ரவரி 5, 6 தேதிகள்

பிப்ரவரி 5–ந் தேதி சென்னை, தி.நகர், குப்புஸ்வாமி தெரு, துளஸீ அபார்ட்மென்ட்ஸ், ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி அவர்கள் க்ருஹத்தில் மாஹாரண்யம் ஸ்ரீவிஷ்ணுராத பாகவதர் குழுவினரால் நடைபெற்ற ஏகாதசி பஜனையிலும், பிப்ரவரி 6–ந் தேதி ராதாகல்யாண மஹோத்ஸவத்திலும், ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

### பிப்ரவரி 7–ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை ஸ்ரீமதி அம்மாளுஅம்மாள் அவர்களின் ஸத்ஸங்கம் நடை பெற்றது.

### பிப்ரவரி 13–ந் தேதி

### மாஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் ப்ரதிஷ்டா தினம்.

காலை 7 மணி அளவில் மாஹாரண்யம் ஸ்ரீ விஷ்ணுராத பாகவதரின் பஜனையும், காலை 8–9 மணி அளவில், ''ஹரே ராம'' பஜனையும் நடைபெற்றன. ''ஹரே ராம'' நாமகீர்த்தனம் செய்து கொண்டு, ஸ்ரீ ஸ்வாமிஜி, பக்தர்களுடன் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் கோவிலுக்கு வந்தார்கள்.

காலை 9 மணி முதல் பகல் 1 மணி வரை பெருமாளுக்குத் திருமஞ்சனம், அலங்காரம், ஆராதனை நடைபெற்றன. கீர்த்தனத்திற்குப் பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி, பக்தர்கள் அனைவருக்கும் தீர்த்தப்ரஸாதம் வழங்கினார்கள்.

பகல் 1 மணி அளவில் அன்னதானம் நடைபெற்றது. மாலை 2–4 மணி அளவில் திவ்யநாமகீர்த்தனம் நடைபெற்றது. மாலை 4–6 மணி அளவில் ஈரோடு ஸ்ரீ பாலாஜி பாகவதர் அவர்களின் ''குருமஹிமை'' ப்ரவசனம் நடைபெற்றது.

### பிப்ரவரி 19–ந் தேதி

ஏகாதசியை முன்னிட்டு மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு, ஸ்ரீ ஸ்வாமிஜி திருமஞ்சனம் செய்தார்கள்.


**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** (5 வரிகள் / 40 வார்த்தைகள்)

¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
''மதுரமுரளி'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.
✆ 044-23710110

அருணாசல சிவ    ஸ்ரீ குருப்யோ நம:    ஓம் ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்

# பகவான் யோகிராம்சுரத்குமார் மகராஜ் அவர்களின் நான்காம் ஆண்டு ஆராதனை விழா

பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம்,
செங்கம் சாலை, திருவண்ணாமலை

**03-03-2005 முதல் 07-03-2005 வரை**

## நிகழ்ச்சி நிரல்

03-03-2005 வியாழக்கிழமை

காலை 10:30 – 12.00 : பஜனை
மாலை 6.00 – 8.30 : பிரவசனம்:
பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
முன்னுரை :
ஜஸ்டிஸ் **டி.எஸ்.அருணாசலம்**

**04-03-2005 வெள்ளிக்கிழமை**

காலை 10:30 – 12.00 : பஜனை
இரவு 7.30 – 9.30 : பஜனாமிர்தம்:
''சங்கீர்த்தன சாம்ராட்'', ''கலைமாமணி''
ஸ்ரீமான் பித்துக்குளி முருகதாஸ்குழுவினர்.

05-03-2005 சனிக்கிழமை

காலை 10:30 – 12.00 : பஜனை
மாலை 5.00 – 6.00 : தேவாரம்: தேவார இசைமணி
திரு.வே. கணேச ஓதுவார் அவர்கள்
இரவு 6.30 – 8.30 : இன்னிசை: ''இசைப்பேரொளி''
ஸ்ரீமதி. நித்யஸ்ரீ மகாதேவன் - குழுவினர்.

**விழா நாட்களில்**

**தினமும் காலை 5.00 : சுப்ரபாதம்**
**காலை 7.00 - 8.45, மாலை 6.00 - 7.30 } அதிஷ்டானத்தில் அபிஷேகம், அர்ச்சனை, பூஜை நடைபெறும்**

**06-03-2005 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
**அகண்ட நாம பஜனை**

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | ஹோமம் |
| காலை 10.30 – 12.00 | : | பகவானுபவங்கள் |
| மாலை 5.30 – 6.15 | : | அருளுரை : பூஜ்யஸ்ரீ நித்யானந்தகிரி சுவாமிஜி அவர்கள். |
| மாலை 6.30 – 8.30 | : | நாடகம் : பகவான் யோகி ராம்சுரத்குமார் திவ்ய சரித்திரம். ஸ்ரீமதி ராம்குவார் தேவிபோம்ரா விவேகானந்தா வித்யாலயா, குரோம்பேட்டை, சென்னை. |
| இரவு 9.00 மணி | : | திவ்ய நாம சங்கீர்த்தனம் ஸ்ரீமான் விட்டல்தாஸ் ஜெய்க்ருஷ்ண தீக்ஷிதர் அவர்கள். |

**07.03.2005 திங்கட்கிழமை (ஆராதனை தினம்)**

| | | |
|---|---|---|
| காலை 6.00 மணி | : | மஹன்யாஸம் மற்றும் சிறப்பு பூஜை ஆரம்பம்./அதிஷ்டானம். |
| காலை 10.00 மணி | : | தீபாராதனை. |
| பகல் 10.15 – 1.00 | : | தீர்த்த நாராயண பூஜை. |
| பகல் 10.15 – 12.15 | : | நாமசங்கீர்த்தனம்: பக்திஸ்வரா பஜன்மண்டலி, சென்னை |
| மாலை 4.15 – 5.00 | : | ப்ரவசனம்: பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் |
| மாலை 5.15 | : | பகவான் யோகி ராம்சுரத்குமார் உத்ஸவமூர்த்தி வெள்ளிரத ஊர்வலம். (ஆஸ்ரமம் – சன்னதித்தெரு இல்லம்-ஆஸ்ரமம்) ஆரத்தி. |

**சுபம்**